Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

நடுநிலை நாளிதழ்
PRGI NO: TNBIL/25/A3556

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 | இதழ் Issue : 25 | செவ்வாய்க்கிழமை Tuesday | 25.11.2025 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் 2 நாள் சுற்றுப்பயணம்:
# நாளை ஈரோடு மாவட்டத்தில் கள ஆய்வு







தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கோவை,ஈரோடு மாவட்டங்களில் (25.11.25),(26.11.25) கள ஆய்வுப் பணிகளுக்காக 2 நாட்கள சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.இரண்டாம் நாளாக (26.11.2025) காலை ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி ஜெயராமபுரத்தில் மாவீரன் பொல்லான் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கத்தினை திறந்து வைக்கிறார்.

அதனை தொடர்ந்து தீரன் சின்னமலை மணிமண்டபம் சென்று, அவரதுதிருவுருவச்சிலைக்கு மலர்தூவி மரியாதை செய்கிறார்கள்

சோலார்புதியபேருந்து நிலைய வளாகத்தில் நடைபெறும்அரசு விழாவில் ரூ.605 கோடியில் முடிவுற்றப் பணிகளைத் தொடங்கிவைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 1,84,491 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்கள்

மாலையில், சித்தோடு ஆவின் பால்பண்ணை வளாகத்தில் பால்வளத் தந்தைபரமசிவன் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைக்கிறார்.

மாவீரன் பொல்லான் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் திறப்பு இரண்டாம் நாளான 26.11.2025 அன்று காலை 10.00 மணியளவில் ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஜெயராமபுரத்தில், சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கத்தை திறந்து வைக்கிறார்கள். மாவீரன் பொல்லான் பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கிலேயரின் அத்துமீறலுக்கு எதிராகப் போர்ப்புரிந்த தீரன் சின்னமலையின் போர்ப்படையிலும், ஒற்றர் படையிலும் தளபதியாகத் திகழ்ந்தவர். ஈரோடு மாவட்டம் அரச்சலூர் அருகே உள்ள நல்லமங்காபாளையம் கிராமத்தில் பிறந்த பொல்லான். சிறுவயதிலிருந்து வாள், வில், மற்போரில் சிறந்த முறையில் பயிற்சிகள் பெற்றார். தீரன் சின்னமலை, வெள்ளையர் படையை எதிர்த்து 1801 இல் நடைபெற்ற பவானிப்போர், 1802 இல் நடைபெற்ற ஓடாநிலைப் போர். 1,803 இல் நடைபெற்ற அரச்சலூர் போர் ஆகிய மூன்று போர்களிலும் பெற்ற வெற்றிகளுக்கு மூலகாரணமாகத் திகழ்ந்தவர் மாவீரன் பொல்லான். அதனால்,சினம்கொண்ட ஆங்கிலேயப் படைத்தளபதி கர்னல் ஹாரிஸ் வீரர்களால், ஓடாநிலை கோட்டைக்கு அருகில் ஜெயராமபுரத்தில் மாவீரன் பொல்லான் சுட்டுக் கொல்லப்பட்டார். மாவீரன் பொல்லான் அவர்களது வீரத்தை போற்றும் வகையில் ஜெயராமபுரத்தில் முழு உருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபம் கட்டித்தருமாறு, பொல்லான் வீரவரலாறு மீட்புக் குழு பல ஆண்டுகளாக விடுத்த கோரிக்கையை ஏற்று, திராவிட மாடல் அரசு 4.90 கோடி ரூபாய் மதிப்பில் ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி ஜெயராமபுரத்தில் அமைத்துள்ள அவரது முழு உருவச்சிலையுடன் கூடிய அரங்கத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் (26.11.2025) காலை 10.00 மணியளவில் திறந்து வைக்கிறார்கள். சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை திருவுருவச்சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்துதல் ஓடாநிலையில் அமைந்துள்ள சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை மணிமண்டப வளாகத்திற்கு நேரில் சென்று, அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள். ஈரோடு மாவட்ட அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா அதனைத் தொடர்ந்து, ஈரோடு, சோலார் புதிய பேருந்து நிலையத்தில் நடைபெறவுள்ள அரசு விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ரூ.605 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்து வைத்து. புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 1,84,491 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்கள். பால்வளத் தந்தை சி.கு. பரமசிவன் திருவுருவச் சிலை திறப்பு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 20.12.2024 அன்று ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், "சின்னியம்பாளையத்தில் பிறந்து நாட்டு விடுதலைக்காக பாடுபட்டதோடு, தன்னுடைய அயலாத முயற்சிகளால் பால் உற்பத்திகளைப் பெருக்கி, தமிழ்நாட்டில் வெண்மைப் புரட்சிக்கு வித்திட்ட பால்வளத் தந்தை. சி.கு. பரமசிவம் திருவுருவச் சிலை ஈரோடு பால்பண்ணையில் நிறுவப்படும்" என்ற அறிவிப்பினை வெளியிட்டார்கள். கொங்கு மண்டலத்தின் பெருமையாகத் திகழ்ந்த சி.கு.பரமசிவன் 'பசுமை நிலம், வெண்மைப் பால்' என்ற கனவைக் கொண்டு நூற்றுக்கணக்கான பசுமாடு வளர்ப்பாளர்களை ஒன்றிணைத்து, தமிழ்நாட்டிற்குப் புதிய பொருளாதாரக் களத்தை உருவாக்கினார். விவசாயக் குடும்பங்களின் வருவாயை உயர்த்தவும், பால் விநியோக முறையை நவீனப்படுத்தவும், பால்வளத் அர்ப்பணிப்புடன் செயல்பட்டவர். துறையைத் தொழில்மயமாக்கவும் தமிழ்நாடு அரசின் ஆவின் நிறுவனம், கூட்டுறவு பால் சங்கங்கள், பால் செயலாக்கக் கட்டமைப்புகள் – அனைத்தும் அவர் விதைத்த விதையின் செழிப்பான விளைவுகளாகும். அதனால் அவர் பால்வளத் தந்தை என அழைக்கப்படுகிறார்.

பெரும் ஆளுமைக்கு நன்றி செலுத்தும் வண்ணம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் , ஈரோடு சித்தோடு ஆவின் பால்பண்ணை வளாகத்தில், ரூ.50 இலட்சம் செலவில் பால்வளத் தந்தை சி.கு. பரமசிவன் அவர்களின் திருவுருவச்சிலையினை நிறுவி 26.11.2025 அன்று மாலை 5.00 மணியளவில் திறந்து வைக்கிறார்கள். இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், மேயர். நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,துணைமேயர்,உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

## நவ.27ல் புயல் உருவாக வாய்ப்பு: தமிழக கடலோர மாவட்டங்களில் நவ.30 வரை கனமழை வாய்ப்பு



சென்னை: இந்திய கடல்பகுதிகளில் 3 காற்று சுழற்சிகள் நிலவுகின்றன. அந்தமான் பகுதியிருந்து தமிழகம் நோக்கி நகரும் காற்று சுழற்சி நவ.27-ம் தேதி புயலாக வலுப்பெறக்கூடும். இதன் காரணமாக தமிழகத்தில் இன்று முதல் நவ.30-ம் தேதி வரை கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல தலைவர் பி.அமுதா இன்று செய்தியாளர்களிடம் கூறியது:

"மலாக்கா ஜலசந்தி மற்றும் அதனை ஒட்டிய தெற்கு அந்தமான் கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, மலேசியா மற்றும் அதனை ஒட்டிய மலாக்கா ஜலசந்தி பகுதிகளில் நிலவுகிறது.

இது வடமேற்கு திசையில் நகர்ந்து, தெற்கு அந்தமான் கடல் பகுதிகளில் நாளை (நவ.25) காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுபெறக்கூடும். இது மேலும் அதே திசையில் நகர்ந்து அதற்கடுத்த 48 மணி நேரத்தில், தெற்கு வங்கக் கடல் பகுதிகளில் புயலாக வலுப்பெறக் கூடும்.

குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக நாளை குமரிகடல் மற்றும் அதனை ஒட்டிய இலங்கை மற்றும் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும்.அதன் பிறகு, இது மேலும் வலுப்பெறக்கூடும்.

தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளிலும் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இந்த 3 சுழற்சிகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்பை ஏற்படுத்தி வருகின்றன. இவை ஒன்றாக இணைந்து கூட நகர வாய்ப்புள்ளது. இவற்றின் நகர்வுகள் தொடர்ந்து கண்காணிக்கப்படும்.

28-ம் தேதி தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஒரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் கன முதல் மிக கனமழையும், தூத்துக்குடி, ராமநாதபுரம், புதுக்கோட்டை, மயிலாடுதுறை மற்றும் கடலூர் மாவட்டங்களிலும், 29-ம் தேதி மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு,சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் மற்றும் புதுவையில் கன முதல் மிக கனமழையும், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், அரியலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, வேலூர் மாவட்டங்களில் ஒரிரு இடங்களிலும்,காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

30-ம் தேதி திருவள்ளூரில் கன முதல் மிக கனமழையும், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை,வேலூர்,திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களில் ஒரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும் கனமழை பெய்யக்கூடும்.

அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் ஊத்தில் 23 செமீ, நாலுமுக்கில் 22 செமீ, திருநெல்வேலி மாவட்டம் காக்காச்சி, கடலூர் மாவட்டம் சேத்தியாதோப்பில் தலா 21 செமீ, திருநெல்வேலி மாவட்டம் மாஞ்சோலையில் 19 செமீ, கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை, சிதம்பரம், புவனகிரி, நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளை, தஞ்சாவூர் மாவட்டம் மதுக்கூர் ஆகிய இடங்களில் தலா 14 செமீ மழை பதிவாகியுள்ளது. தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை காலத்தில் அக்.1 முதல் நவ.24-ம் தேதி வரை வழக்கமாக 33 செமீ மழை கிடைக்கும். இந்த ஆண்டு 34 செமீ, அதாவது 5 சதவீதம் அதிக மழை கிடைத்துள்ளது.

தென்காசி, திருநெல்வேலி மாவட்டங்களில் வழக்கத்தை விட மிக அதிகமாகவும், திருப்பூர், கரூர், திண்டுக்கல்,சேலம்,பெரம்பலூர், செங்கல்பட்டு, சென்னை ஆகிய 7 மாவட்டங்களில் வழக்கத்தை விட குறைவாகவும் மழை பெய்துள்ளது" என்று அவர் கூறினார்.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
**தினத்தளம்**
DHINATH DHALAM
**வாட்ஸ் அப் குரூப்பில்**
**இணையுங்கள்**
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



## ஸ்ரீ நாட்டிய நிகேதன் சார்பாக

# கோவையில் 'நிருத்ய சந்தியா'வின் 25ம் ஆண்டு கொண்டாட்ட விழாவின் ஒரு பகுதியாக புகழ்பெற்ற "நிருத்ய சங்கீத நிபுணா" பட்டம் ஸ்ரீ ரோஹித் பட் உப்பூருக்கு வழங்கப்பட்டது

கோவையில் சேர்ந்த பரதநாட்டியகுழுக்களில் ஒன்றான ஸ்ரீ நாட்டிய நிகேதன், தனது வருடாந்திர நடன விழாவான பரதநாட்டியத்தின் வளமான பாரம்பரியத்தை வெளிப்படுத்தி வருகிறது, மேலும் இளம் நடனக் கலைஞர்கள் தங்-அவரது ஆன்மாவைத் தொடும் இசை, தாளத்தைப் பற்றிய ஆழமான அறிவு, மற்றும் தனித்துவமான கலைத்திறன்



நிருத்ய சந்தியாவின் 25வது பதிப்பை பெருமையுடன் கொண்டாடுகிறது.ஒருகுறிப்பிடத்தக்க மைல்கல்லைக்குறிக்கும் வகையில், இவ்விழா நவம்பர் 15 மற்றும் 16 தேதிகளில் மாருதி கான சபாவில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, நவம்பர் 21, 22 மற்றும் 23 தேதிகளில் கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள ஹிந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரியில், பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது

ஸ்ரீ நாட்டிய நிகேதன் குழுவின் நிறுவனரும் இயக்குனருமான ஸ்ரீமதி மிருதுளா ராய் தலைமையில் கடந்த 25 ஆண்டுகளில்,நிருத்ய சந்தியா கள் கலையை நம்பிக்கை, பக்தி மற்றும் நேர்த்தியுடன் வழங்க ஒரு புகழ்பெற்ற தளத்தை வழங்கி உள்ளது. இந்த வெள்ளி விழா ஆண்டு,நடனத்தை ஒரு தெய்வீக மற்றும் கலாச்சாரவெளிப்பாடாகக்கொண்டாடும்வகையில்,திறமையானகலைஞர்களின் வசீகரிக்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றது. கொண்டாட்டங்களின் சிறப்பம்சமாக, பரதநாட்டிய சகோதரத்துவம் முழுவதும் போற்றப்படும் ஒரு புகழ்பெற்ற கர்நாடக இசைப் பாடகரான ஸ்ரீ ரோஹித் பட் உப்பூருக்கு மதிப்புமிக்க "நிருத்ய சங்கீத நிபுணா" பட்டத்தை ஸ்ரீ நாட்டிய நிகேதன் சார்பாக வழங்கப்பட்டது

ஆகியவை நடன நிகழ்ச்சிகளை உணர்ச்சி ஆழம் மற்றும் ஆன்மீக சிந்தனையை மேம்படுத்துவதற்காகப் போற்றப்படுகிறது. பரதநாட்டியத்தின் ஒரு இசைத் தூணாக அவர் ஆற்றிய விலைமதிப்பற்ற பங்களிப்பைப் பாராட்டி இந்த பட்டம் வழங்கப்படுகிறது. இவரது மெல்லிசைகள் நடனத்தின் உயிர்ச் சக்தியாக மாறி, ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நினைவில் வைத்துக்கொள்ளும் வண்ணமும் அர்த்தமுள்ளதாகவும் ஆக்குகின்றன.

இந்நிகழ்வில் கலை ஆர்வலர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பலர் கலந்துகொண்டனர்.

# கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள குமரகுரு கல்லூரியில் "பவானி ஜமுக்காளம்" எனும் புத்தகம் வெளியீட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது

## குமரகுரு கல்வி நிறுவனங்களின் தலைவர் சங்கர் வானவராயர் முன்னிலையில் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் வெளியிட்டார்

கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள குமரகுரு கல்வி நிறுவனங்கள் சார்பில் 'என்-ஜமுக்காளம்" எனும் புத்தகத்தை வெளியிட்டார்.

இந்தநிகழ்வில்பவானி தலைவர் சங்கர் வானவராயர் அவர்களும் அதுபற்றி தன்னிடம் பேசியது, ஜமுக்காளம் பற்றிய ஒரு




றென்றும் ஜமுக்காளம்' எனும் நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. குமரகுரு கல்வி நிறுவனங்களின் தலைவர் சங்கர் வானவராயர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் நிறுவனர் கே.ஆர்.நாகராஜன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று, பவானி ஜமுக்காளத்தின் சிறப்பு, பாரம்பரியம் மற்றும் தனித்துவத்தை போற்றும் வகையிலும், கைத்தறி நெசவாளர்களின் கலைத்திறனை பாராட்டும் விதமாகவும் 'ஸ்டுடியோ ஏ' நிறுவனத்தின் நிறுவனர் அமர் ரமேஷ் எழுதிய "பவானி பகுதியை சேர்ந்த பல்வேறு நெசவாளர்கள் பங்கேற்றனர். ஜவுளி துறை திறன் மேம்பாட்டு கழகத்தின் தலைமை செயல் அதிகாரி ஸ்வப்னா மிஸ்ரா அவர்களும் இந்த நிகழ்வில் பங்கேற்று, கே.ஆர்.நாகராஜனிடம்இருந்துமுதல் பிரதியை பெற்றுக்கொண்டார். இந்த நிகழ்வில் பேசிய 'ஸ்டுடியோ ஏ' நிறுவனத்தின் நிறுவனர் அமர் ரமேஷ், ஜமுக்காளம்பற்றி பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த ஏதாவது செய்யவேண்டும் என தானும் யோசித்து கொண்டிருந்தாதபோது, அதே நேரத்தில் குமரகுரு கல்வி நிறுவனங்களின் ஆவண படத்தை எடுக்க வேண்டும் என்ற முடிவை முதலில் எடுக்க உந்துதலாக இருந்ததாக குறிப்பிட்டார். இதற்காக பல நாட்கள் பவானியில் தங்கி, ஜமுக்காளம் பற்றி தொழில்நுட்ப அளவிலும், கலை அளவிலும் பல்வேறு கோணங்களிலும் அதை உற்பத்தி செய்யும் நெசவாளர்களுடன் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைத்ததாக கூறினார். அதுபற்றிய வீடியோ சமூக வலைத்தளங்களில்ஜமுக்காளம்மீதான சாதகமான விவாதங்களை உருவாக்கியது என பகிர்ந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



ஈரோடுமாவட்டஆட்சித்தலைவர்ச.கந்தசாமிநேற்று(24.11.2025)மாவட்டஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்துகோரிக்கைமனுக்களைபெற்றுகுறைகளைகேட்டறிந்தார்.





தமிழ்நாடு துணை முதலமைச்சரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும், கழகத்தின் இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47வது பிறந்தநாளினை முன்னிட்டு ஆலங்குளம் பேரூர் கழக இளைஞரணி சார்பில் ஆலங்குளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் வைத்து நடைபெற்ற பொது மருத்துவ முகாம் மற்றும் மாபெரும் இரத்ததான முகாமினை துவக்கி வைத்தனர்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு

# திட்டக்குடி அருகே நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது

தமிழ்நாடு துணை முதலமைச்சரும், தி.மு.க. இளைஞர-பாளர் ஆக்கனூர் பாரதிராஜா தலைமையில் நடைபெற்ற இந்த பொதுமக்களுக்கு ஆர்வமுடன் நலத்திட்ட உதவிகளை



ணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா முன்னிட்டு, கடலூர் மாவட்டம் திட்டக்குடி அடுத்த ஆக்கனூரில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சிறப்பாக நடந்தது.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்-விழாவிற்கு, ஒன்றியச் செயலாளர் பட்டூர் அமிர்தலிங்கம் முன்னிலை வகித்தார்.

விழாவில் சிறப்பு விருந்தினராக கடலூர் மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி.வெ.க. வெங்கடேசன் கலந்துகொண்டு, வழங்கினார்.

மேலும், அவர் தூய்மைப் பணியாளர்களை கௌரவித்து அவர்களுடன் உற்சாகமாகப் புகைப்படம் எடுத்துக்கொண்டார். இந்த நிகழ்வில் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.









சாய்பாபாவின் நூற்றாண்டு ஜெயந்தி விழாவை முன்னிட்டு கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை சத்திய சாய் சேவா சமிதி சார்பில் சாய்பாபாவின் ரத உற்சவம் நடைபெற்றது மலர்களால் அலங்கரிக்கப்பட்ட சாய்பாபாவின் உருவப்படங்கள் முத்துப் பள்ளத்தில் பொருத்தப்பட்டு சென்னை சாலையில் இருந்து ரத ஊர்வலம் தொடங்கியது உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மணிகண்ணன் தலைமையில் தொடங்கிய ரத ஊர்வலத்தை உளுந்தூர்பேட்டை ஸ்ரீ சாரதா ஆசிரமத்தின் நிர்வாகி யத்தீஸ்வரிஆத்மவிகாசபிரியாஅம்பாகொடியேசத்து தொடங்கிவைத்தார்நகரின்முக்கியவீதிகள்வழியாக வந்த கதை ஊர்வலத்தில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர் இறுதியாக உளுந்தூர்பேட்டை சத்யசாய் சேவா சங்கதியை அடைந்தது. இதில் 100 க்கும் மேற்பட்ட பெண்கள் உட்பட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்....

# கோவையின் பெருமைகளை பறைசாற்றும் விதமாக நடத்தபடும் ஓவிய சந்தை நிகழ்ச்சி

## கோவை மாவட்ட ஆட்சியர் பவன் குமார் ஜி. கிரியப்பனவர் ரிப்பன் வெட்டி தொடங்கி வைத்தார்

கோவை விழா 18 வது பதிப்பு நவம்பர் 14 ஆம் தேதி முதல் அனைவருக்குமான



நிகழ்வுகளுடன் நகரின் பல்வேறு பகுதிகளில் கொண்டாடப்படுகிறது. 2018 ஆம் ஆண்டு முதல் கோயம்புத்தூர் விழாவின் 10 வது பதிப்பில் அறிமுகப்படுத்தப்பட்டு மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்ற முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாக கருதப்படும் ஓவிய சந்தை இந்த ஆண்டும் நடத்தப்பட்டது. ரிப்ளெக்ஷன்ஸ் கருப்பொருளை மையமாக கொண்டு இந்த ஆண்டு நடத்தப்படுகிறது.

கோயம்புத்தூர் மற்றும் தென் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் கலைஞர்கள் பல்வேறு கலை வடிவங்களில் தமது திறமைகளை வெளிப்படுத்தும் களமாக அமைகின்றது.

இதனை கோவை மாவட்ட ஆட்சியர் பவன் குமார் ஜி. கிரியப்பனவர் தொடங்கி வைத்தார்.

இந்த ஆண்டு நிகழ்ச்சியானது , ரேஸ் கோர்ஸ் பகுதியில் உள்ள அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்டது.

இந்த ஆண்டின் கோயம்புத்தூர் விழா ஆர்ட் ஸ்ட்ரீட் ஆயிரக்கணக்கான பார்வையாளர்களை கவர்ந்தது. நகரின் மிகவும் விரும்பப்படும் கலாச்சார நிகழ்வுகளில் ஒன்றாக பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு 90 கலைஞர்கள் பங்கேற்று, தங்களது தனித்துவமான கலைத்திறன்களை வெளிப்படுத்தினர். இது கோவையின் வளர்ந்து வரும் கலைத்துறைக்கு ஒரு வண்ணமயமான கொண்டாட்டமாக அமைந்தது. முக்கிய புதுமையாக பெவிலியன்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. பார்வையாளர்களிடையே இவை பெரும் வரவேற்பைப் பெற்றன; இது முழு ஆர்ட் ஸ்ட்ரீட் அனுபவத்துக்கு ஒரு புதிய ஆழத்தையும் அழகையும் சேர்த்தது. இந்த ஆண்டு கருப்பொருள் ரிப்ளெக்ஷன்ஸ் , ஒளி மற்றும் வடிவங்களின் உடல் பிரதிபலிப்புகள் முதல் மனது, உணர்ச்சி, நினைவுகள் ஆகியவற்றின் ஆழமான பிரதிபலிப்பதாக இருந்தது. கோவையின் கடந்த காலத்தையும் அதன் மாற்றம் அடையும் நிகழ்காலத்தையும் இணைக்கும் வகையில் இந்த கருத்து பார்வையாளர்களை ஆழ்ந்து சிந்திக்கவும், யோசிக்கவும், கோயம்புத்தூரை புதிய கோணங்களில் மீண்டும் கண்டறியவும் செய்தது.

# கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையின் சார்பாக

# உலக குறை பிரசவ குழந்தைகள் தினம் குறித்த ரீல் வீடியோ வெளியீட்டு நிகழ்ச்சி நடைபெற்றது

நவம்பர் 22 ஆம் தேதி ஆண்டுதோறும் உலக குறை மாத குழந்தைகள் தினமாக கொண்டாடப்-



பட்டு வருகின்றது. இந்த நாளில், இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், குறை பிரசவ குழந்தைகளின் பெற்றோர்களை வரவழைத்து அவர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில், இது குறித்த விழிப்புணர்வு ரிலீஸ் வீடியோக்கள் வெளியீட்டுவிழாநிகழ்ச்சி கோவை ராமகிருஷ்ணா மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது. மருத்துவ நிபுணர்களால் வடிவமைக்கப்பட்ட விழிப்புணர்வு வீடியோக்கள் மூலம், 24 மணி நேர வழிகாட்டுதலை பெற்றோர்களுக்கு வழங்கி, குழந்தை வளர்ப்பை மேம்படுத்தும் நோக்கமாக டிஜிட்டல் தளத்தின் வழியாக இந்த வீடியோக்கள் வெளியிடப்பட்டது. இதனை ஸ்ரீ இராமகிருஷ்ணா மருத்துவமனையின் இணை நிர்வாகஅறங்காவலர் நரேந்திரன், தலைமை செயல் அதிகாரி ராம்குமார், தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் ராஜகோபால், மருத்துவ கண்காணிப்பாளர் அழகப்பன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வெளியிட்டனர் தொடர்ந்து இணை நிர்வாகஅறங்காவலர் நரேந்திரன் பொதுமக்கள் மத்தியில் கூறியதாவது..

ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையில் பச்சிளம் குழந்தைகள் துறையில், குறை பிரசவத்தோடு பிறந்த குழந்தைகள் 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு, குழந்தையின் வளர்ச்சிக்கும், சிகிச்சைக்கும், உதவி வருகின்றது, அவ்வாறு வளர்ந்து வரும் குழந்தைகள் ஒரு வயதை கடந்த பின் அவர்கள் ஒன்று கூடி, மகிழ்ச்சி அடையும் ஒரு விழிப்புணர்வு விழாவாக இந்த நாளை கொண்டாடி வருகின்றதாக தெரிவித்தார் தற்போது வெளியிடப்பட்டுள்ள டிஜிட்டல் தளத்தின் நோக்கம் குழந்தைகள் மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பிய பிறகும், பெற்றோர்களுக்கு முழு நேர வழிகாட்டுதல் வழங்குவது மருத்துவமனையின் முக்கிய கடமையாகும், மருத்துவ நிபுணர்களால் வடிவமைக்கப்பட்ட இந்த, விளக்க வீடியோக்கள் மூலம் பெற்றோர்கள் முழுமையாக பராமரிப்பு வழிகாட்டுதலை பெற முடியும் அதற்காக இவ்விழா நடத்தப்பட்டதாக தெரிவித்தார். தொடர்ச்சியாக பெற்றோர்கள் தங்களது கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். குழந்தைகளுக்கான ஃபேஷன் ஷோ சிறப்பு காணொளி ஒளிபரப்பு மூலம் வெளிப்படுத்தப்பட்டு. அதை தொடர்ந்து, குழு நடனம், கேக் வெட்டுதல், புகைப்படம் எடுத்தல் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# உதகை அருகே புலி தாக்கி பெண் உயிரிழப்பு



உதகை அருகே மாவனல்லா கிராமத்தில் புலி தாக்கி பெண் உயிரிழந்தார். தனியார் நிலத்தில் சிக்கி என்ற பழங்கு டியின பெண் மாடு மேய்த்துக் கொண்டி ருந்தார். மாடு மேய்த்துக் கொண்டி ருந்த போது, பின்னால் வந்த புலி, பெண்ணை கடித்து இழுத்துச் சென்றது. அகழிக்குள் புலி இழுத்துச் சென்ற நிலையில் பழங்குடி யின பெண் உடலை வனத்து றையினர் மீட்டனர்.



# புதிய பெட்ரோல் நிலையம் துவக்கம்: அமைச்சர்கள் எஸ்எஸ் சிவசங்கர், சி.வெ. கணேசன் திறந்து வைத்தனர்

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் அருகே கடலூர் - சேலம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள மணவாளநல்லூர் பகுதியில், தனியார் நிறுவனமான அன்பகதேவன் ஏஜென்சிக்குச் சொந்தமான புதிய பெட்ரோல் நிலையம் திறக்கப்பட்டது.

இத்திறப்பு விழாவில், தமிழக மின்சாரம் மற்றும் போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்எஸ் சிவசங்கர் மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

இரு அமைச்சர்களும் இணைந்து ரிப்பன் வெட்டி, புதிய பெட்ரோல் நிலையத்தை முறைப்படி திறந்து வைத்தனர். பின்னர், இருசக்கர வாகனங்களுக்குப் பெட்ரோல் நிரப்பி வாடிக்கையாளர்களைப் பொன்னாடை அணிவித்து அன்புடன் வரவேற்று, மகிழ்ந்தனர்.

இந்த நிகழ்ச்சியில், அன்பகதேவன் ஏஜென்சியின் நிர்வாகக் குழுமத்தினர், உள்ளூர் கட்சி நிர்வாகிகள் மற்றும் திரளான ஊழியர்கள் கலந்துகொண்டனர். நெடுஞ்சாலையில் பயணிக்கக்கூடிய வாகன ஓட்டிகளின் எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்த புதிய பெட்ரோல் நிலையம் துவக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# விருதாச்சலம் சட்டமன்றத் தொகுதி திமுக தேர்தல் அலுவலகம் அமைச்சர்கள் எஸ்எஸ். சிவசங்கர் சி.வெ. கணேசன் திறந்து வைத்தனர்

கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் சட்டமன்ற தொகுதி திமுக சார்பில் அமைக்கப்பட்ட



தேர்தல் அலுவலகத்தை தமிழக மின்சாரம் மற்றும் போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்எஸ் சிவசங்கர், மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் ஆகியோர் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர்.

அப்போது, திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளையும் திட்டங்களையும் மக்களுக்கும் சென்றடையும் வகையில் அனைவரும் களப்பணியாற்ற வேண்டும் என்று கட்சி நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில், தொகுதி மேற்பார்வையாளர் குலோத்துங்கன், ஒன்றிய கழக செயலாளர் பாவாடை கோவிந்தசாமி, வேல்முருகன், கனக கோவிந்தசாமி, கோட்டேரிபழனி.சுரேஷ், விருத்தாச்சலம் நகர செயலாளர்தண்டபாணி, நகர் மன்ற தலைவர் மருத்துவர் சங்கவி முருகதாஸ், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் கலைச்செல்வன், இளைஞரணி அமைப்பாளர் வசந்தகுமார் மற்றும் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் திரளான திமுக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பித்தனர்.

# ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்.

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நேற்று (24.11.2025) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



நடைபெற்றது.

விதவை இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, உதவித்தொகை, கருணை அடிப்படையில் வேலை, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, கலைஞரின் கனவு இல்லம், இலவச வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 255 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கைஎடுத்திட உத்தரவிட்டார். மேலும், முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு. சாந்த குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முகமது குதுரத்துல்லா உட்பட அனைத்துத்துறைஅலுவலர்கள்கலந்துகொண்டனர்.



வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து உள்ள நிலையில் உளுந்தூர்பேட்டை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது கெடிலம் திருநாவலூர் ஆசனூர் வடகுரும்பூர் எறையூர் களமருதூர் உள்ளிட்ட நூற்றுக்கு மேற்பட்ட கிராமங்களில் நள்ளிரவு முதல் இடைவிடாத மழை பெய்து வருவதால் சாலைகள் மற்றும் தெருக்களில் மழை நீர் பெருகெடுத்து ஓடுகிறதுதொடர்மழைகாரணமாகஇயல்புவாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் வீட்டுக்குள்ளே முடங்கியுள்ளனர் இந்த தொடர் மழையால் வாகன ஓட்டிகள் கடும் சிரமம் அடைந்துள்ளனர்

# தென்காசியில் 2 பஸ்கள் நேருக்கு நேர் மோதி பயணிகள் 6 பேர் பலி



தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அருகே கிடையால் காமராஜர் புரத்தில்எதிரெதிரே வந்த இரண்டு தனியார் பேருந்துகள் நேருக்கு நேர் மோதியதில்சம்பவஇடத்தில் ஆறு பேர் பலியாகினர்20க்கும் மேற்பட்டோர் படுதான் அடைந்தனர் இது பற்றிய விவரம் ஆவது தென்காசி மாவட்டம் கடையநல்லூரை அடுத்துள்ள இடைகால் காமராஜர் புரத்தில் ராஜபாளையத்திலிருந்து தென்காசி சென்று கொண்டிருந்த கே எஸ் ஆர் என்ற தனியார் பேருந்தும் தென்காசியில் இருந்து கோவில்பட்டி நோக்கி விரைந்த எம் ஆர் கோபாலன் இந்த தனியார் பேருந்தும்நேருக்கு நேர் மோதியதில் கடையநல்லூரைச் சார்ந்த தனியார் பள்ளி தமிழாசிரியை தேன்மொழி உட்படஆறு பேர்சம்பவ இடத்தில்பலியாகினர்.20க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தநிலையில்கடையநல்லூர் மற்றும் தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 20க்கும் மேற்பட்டவரில் ஏழு பேர் மிகவும் கவலைக்கிடமான நிலையில்திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் மேலும் படுகாயம் அடைந்த 20 பேர் தென்காசி மாவட்டஅரசு தலைமை மருத்துவமனையில்சிகிச்சை பெற்று வருகின்றனர் விபத்து நடந்த இடத்திற்கு மக்கள் குறை தீர்ப்பு முகாமில் கலந்து கொண்டிருந்தமாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஏ கே கமல் கிஷோர் இ.ஆ.ப.அவர்களும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு அரவிந்த் இ.கா.ப.அவர்களும் சம்பவ இடத்திற்கு உடனடியாக விரைந்து வந்து மீட்பு பணிகளும் மேற்கொண்டனர்.தென்காசி மாவட்ட காவல்துறையினர் மற்றும் தீயணைப்புமீட்பு படையினர் அப்பகுதி பொதுமக்கள் ஆகியோர் மீட்பு பணியை மேற்கொண்டனர் தென்காசி வடக்கு மாவட்ட முன்னாள் பொறுப்பாளரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான டாக்டர் செல்லத்துரை மாநில விவசாய அணி இணை செயலாளர் ஆனைகுளம் அப்துல் காதர் ஆகியோரும் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மீட்பு பணிகளை துளிதப்படுத்தினர் கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான் விபத்து நடந்த இடத்திற்கு வந்து பார்வையிட்டார்ப

கடையநல்லூர் முத்துகிருஷ்ணா பகுதியில் உள்ள உலக மேல்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக பணியாற்றி வரும் தேன்மொழி (55)கணவர் பெயர்வெங்கடேஸ்வரன் என்பவரும் வனராஜ்(67) புளியங்குடியைச் சார்ந்த மல்லிகா (55)சங்கரன்கோவில் அருகே உள்ள கற்பகவல்லி (32)பெயர் தெரியாத சிகப்பு மற்றும் மஞ்சள் கலர் சேலை அணிந்த 50 வயதுபெண் அதேபோன்று பச்சை கலர் சேலை ஜாக்கெட் அணிந்த 50 வயது பெண் ஆகியோர் சம்பவ இடத்திலே பலியாகினர் :விபத்து குறித்து கேள்விப்பட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தென்காசி மாவட்ட பொறுப்பு அமைச்சரான வருவாய் மற்றும் பேரிடர் துறை அமைச்சர்மாண்புமிகு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் அவர்களை அனுப்பி வைத்தார்

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் துறை அமைச்சர் அவர்களோடு தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு சென்ற அங்கிருந்து படுகாயம் அடைந்தவர்களையும் பலியானவர்களின் உறவினர்களுக்கு ஆறுதல் கூறினர் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடன் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் முன்னாள் வடக்கு மாவட்ட கழக செயலாளர் செல்லத்துரை மாநில விவசாய அணி இணை அமைப்பாளர் ஆனை குளம் அப்துல் காதர்ஆலங்குளம் ஒன்றிய குழு தலைவி திவ்யா மணிகண்டன் கடையநல்லூர் ஒன்றிய குழு தலைவர் துணைத்தலைவர் ஐவேந்திரன் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் மற்றும் திட்டக் குழு உறுப்பினருமான முருகன்கடையநல்லூர் நகர்மன்ற உறுப்பினர் சிட்டி திவான் மைதீன் உட்பட கழக நிர்வாகிகள் நேரில் சென்று இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தியும் காயம் அடைந்தவர்களுக்கு ஆறுதல் கூறியும் சென்றனர்:விபத்து ஏற்படுத்திய கே எஸ் ஆர் பேருந்தின் உரிமத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென பல்வேறு தரப்பிலிருந்தும் கோரிக்கைகள் இருந்த நிலையில் உடனடியாக ரத்து செய்யப்பட்டது ராஜபாளையத்திற்கு தெற்கே அதிவேகத்தால் பொதுமக்களின் உயிரோடு விளையாடும் கே எஸ்ஆர்பஸ்களின் குடும்பத்தை ரத்து செய்ய வேண்டும் அரசு பேருந்துகளுக்குபோட்டிபோட்டு கொண்டு பயணிகளை ஏற்றுவதற்காக கண்மணி தெரியாமல் அதிவேகத்தில்பேருந்துகளைஇயக்கி தொடர்ச்சியாக விபத்து ஏற்படுத்தி வருகின்றது கே எஸ் ஆர் நிர்வாகம் தனியார் பேருந்துகளில் கண் கூசும் அளவிற்கு led விளக்குகளும் அதிக டெசிபல் அளவான ஏகாரம் சத்தங்களும் பொதுமக்களை பதட்டமடை செய்வதால் தென்காசி மற்றும் விருதுநகர் மாவட்ட போக்குவரத்து ஆய்வாளர்கள் மற்றும் அலுவலர்கள் இனி வரும் நாட்களில் பகல் இரவு என எந்நேரமும் தனியார் பேருந்துகளை சோதனையிட வேண்டுமென சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்



முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் 22 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட திமுக சார்பாக பெரியார் நகர் அமைச்சர் முகாம் அலுவலகத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, மதுவிலக்கு ஆயத் தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் முரசொலி மாறன் அவர்களின் திரு உருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்தார்.இந்நிகழ்ச்சியில் திமுக கழகத் துணை பொதுச்செயலாளரும் மேல் சபை உறுப்பினருமான அந்தியூர் ப.செல்வராஜ் , ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.ஈ. பிரகாஷ் , ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ் ,மாநில மாணவரணி துணை செயலாளர் வீரமணி ஜெயக்குமார் ,மாவட்டத் துணைச் செயலாளர் ஆ. செந்தில்குமார்,மண்டல குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ,பகுதி கழகச் செயலாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.







தமிழ்நாடு துணை முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி மாநில செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு திமுக தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பாக ஈரோடு மாநகர் மல்லிகை அரங்கில் மாநில அளவிலான சதுரங்கம், கட்டுரை,ஓவியம், திருக்குறள் ஒப்புவித்தல் போட்டியை தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். இந்த நிகழ்வில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார் , மாநகர திமுக கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் ,ஈரோடு மாநகராட்சியின் துணை மேயர் வே. செல்வராஜ் ,மாவட்ட துணைச் செயலாளர் ஆ.செந்தில்குமார் ,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம்,தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள்,கோட்டை பகுதி கழகச்செயலாளர் பொ.ராமச்சந்திரன் ,மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாணவ மாணவியர்களின் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாநகர் மேட்டூர் சாலையில் (தனியார் ஜவுளி கடை அருகில்) நடந்த சாலை விபத்தில் காயமடைந்த ஒரு பெண்மணி மற்றும் சிறுவனை, அந்த வழியாக காரில் சென்ற தமிழ்நாடு வீட்டு வசதித் துறை மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி உடனடியாக மீட்டார். காயமடைந்த இருவரையும் அவர் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார். அமைச்சரின் இந்த மனிதாபிமான நடவடிக்கை அப்பகுதியில் பொதுமக்களிடையே நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.



திமுக கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு மாநகர திமுக இளைஞரணி சார்பில், ஈரோடு மாநகர துணை அமைப்பாளர் பா.ஜாகிர் உசேன் ஏற்பாட்டில் ஈரோடு சோலார் அட்சயம் அறக்கட்டளையில் ஈரோடு தெற்கு மாவட்ட திமுக கழக செயலாளர், தமிழ்நாடு வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி முதியவர்களுக்கு இனிப்புகள் வழங்கி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் திமுக கழக துணை பொதுச்செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராஜ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாவட்ட துணை செயலாளர் ஆ. செந்தில்குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.





தமிழ்நாடு துணை முதலமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணி மாநில செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட திமுக மாவட்ட ,மாநகர மாணவரணி சார்பாக ரத்ததான முகாம் ஈரோடு பெரியார் நகர் அமைச்சர் முகாம் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகரப்புற வளர்ச்சித் துறை ,மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் , மாநில மாணவரணி துணைச் செயலாளர் வீரமணி ஜெயகுமார் ,மாநகர அமைப்பாளர் ஸ்ரீதர் அவர்கள் மற்றும் கழக மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், கழக சார்பு அணியினர், மகளிர் அணியினர் கலந்து கொண்டனர் .

# வேளாளர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி (VCET) வித்யா ரத்னா சிறந்த ஆசிரியர் விருது 2025

வேளாளர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி (துன்னாட்சி),ஈரோடு,CII Erode Excell மற்றும் Erode Excell Pathippagam இணைந்து, 23 நவம்பர் 2025 அன்று கஸ்தூரிபா அரங்கத்தில் "வித்யா ரத்னா - சிறந்த ஆசிரியர் விருது 2025" நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தினர். கல்வித் துறையில் சிறப்பாக பணிபுரிந்து சமூகத்திற்கு பெரும் பங்களிப்பு செய்த சிறந்த ஆசிரியர்களை கௌரவிப்பதே இந்நிகழ்ச்சியின் நோக்கம்.

Jc. HGF. A. C. முருகானந்தம்,CEO,Erode Excell Pathippagam வரவேற்புரையுடன் துவங்கியது. நிகழ்ச்சியின் சிறப்பம்சமாக Excell Yellow Pages புத்தகம் வெளியிடப்பட்டது. வேளாளர் கல்வி அறக்கட்டளையின் செயலாளர் மற்றும் தாளாளர் திரு. எஸ்.டி. சந்திரசேகர் அவர்கள் தலைமை உரையில் நாட்டை உருவாக்கும் பணியில் ஆசிரியர்கள் வகிக்கும் முக்கிய பங்களிப்பை பாராட்டினார். தலைமை விருந்தினர் உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி மற்றும் கேரளாவின் முன்னாள் ஆளுநர் நீதிபதி பி. சதாசிவம் அவர்கள், அர்ப்பணிப்பு, நெறிமுறைகள் மற்றும் நற்பண்பு சார்ந்த கல்வியின் அவசியத்தை வலியுறுத்திய ஊக்கமூட்டும் உரையை வழங்கினார். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 340 சிறந்த ஆசிரியர்களுக்கு "சிறந்த ஆசிரியர் விருது 2025" வழங்கப்பட்டு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. அறக்கட்டளை உறுப்பினர் திரு. எம். யுவராஜா அவர்கள் மற்றும் VCET முதல்வர் முனைவர் எம். ஜெயராமன் அவர்கள் விருதுபெற்ற ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு, கல்விச்சேவை மற்றும் சமூக பங்களிப்பை பாராட்டி சிறப்புரைகளை வழங்கினர். கல்வி நிறுவனங்களின் தலைவர்கள், விருதுப் பெற்ற ஆசிரியர்கள் தங்களின் கல்விப் பயணத்தையும் இந்த கௌரவம் பெற்ற பெருமையையும் பகிர்ந்து கொண்டு நன்றியுரைகளை வழங்கினர். VCET பெண்கள் மேம்பாட்டு குழு ஒருங்கிணைப்பாளர் முனைவர் என். ஜெயசாந்தி அவர்கள் நன்றியுரை வழங்கினார்.




வேளாளர் கல்வி அறக்கட்டளையின் செயலாளர் மற்றும் தாளாளர் எஸ்.டி.சந்திரசேகர் அவர்கள் மற்றும் அறக்கட்டளை உறுப்பினர் சி.பாலசுப்ரமணியம் மற்றும் எம். யுவராஜா நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.வேளாளர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் (VCET) முதல்வர், புலமுதல்வர், தேர்வுகட்டுப்பட்டு அதிகாரி, நிர்வாக மேலாளர்,துறைத்தலைவர்கள் பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



திமுக கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு மாநகர திமுக இளைஞரணி சார்பில், ஈரோடு மாநகர துணை அமைப்பாளர் பா.ஜாகிர் உசேன் ஏற்பாட்டில் ஈரோடு மாநகர் சோலார் அட்சயம் அறக்கட்டளையில் ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் தலைமையில் (22.11.2025 ) அன்று காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.